DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-228/2022

Prosecution witness – PW 1

| | | |
|---|---|---|
| Name | : திரு.ஆத்மநாதன் | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(Accused absent. Petiton u/s.317 Cr.P.C filed and allowed.)

20.01.2026- 03.20 PM

முதல் விசாரணை:-

1. நான் பெரியகுளம் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரி தெரியும், எங்கள் ஊரைச் சேர்ந்தவர். பட்டியல் சாட்சிகள் 2 முதல் 4 வரையுள்ள பொங்கல்செல்வி, ரவீந்திரன், நமச்சிவாயம் ஆகியோர்களைத் தெரியும். எனக்கு உறவினர்கள்

2. சுமார் 6, 7 ஆண்டுகளுக்கு முன்பு கடலைக்கொல்லை தோட்டத்திற்கு சென்றிருந்தேன். நான் தோட்டத்திற்கு சென்றுவிட்டு திரும்ப வந்த போது பெரியகுளம் பேருந்து நிறுத்தம் அருகே நானும், எனது 1வயதுடைய பேத்தி ஜெபாஸ்ரீ தோலில் வைத்துக்கொண்டு வந்த போது எதிரே வந்த எதிரி முருகவேல் என்னடா தாயோழி உனக்கு என்று கூறிக்கொண்டே இடது பக்க காலில் கத்தி, கம்பால் அடித்தார். வலது நெற்றிபுருவம் அருகே மீண்டும் அடித்து விட்டார். சம்பவ தினத்திற்கு 1 மாதத்தி,ற்கு முன்பு எதிரியின் மாடு கடலை கொல்லையில் மேய்ந்து விட்டதால் நான் அவரை சத்தம் போட்டேன். அதனால் எனக்கும் அவருக்கும் பகை ஏற்பட்டது.

3. காயம்பட்டவுடன் நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். பின்னர் அங்கிருந்து காவல் நிலையம் சென்றேன். பின்னர் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன். அங்கே 1 வாரம் சிகிச்சையில் இருந்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் மனுவை காவல் நிலையத்தில் உள்ள போலீசார் தான் எழுதினார்கள். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்களை தான் போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்து ஒரு வாரம் கழித்து தான் என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்க போலீசார் வந்தார்கள் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் எனது பேத்தியை எனது தோலில் வைத்திருந்ததாக புகார் வாக்குமூலத்திலோ, போலீசார் விசாரணையிலோ கூறவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த போது சம்பவ இடத்தில் வேறு தனி நபர்கள் யாரும் இல்லை என்றால் சரியல்ல. சாட்சிகள் ரவீந்திரன், நமச்சிவாயம் ஆகியோர் அங்கே தான் இருந்தார்கள்.

4. மேற்கண்ட சாட்சிகள் என்ன வேலை செய்கிறார்கள் என்றால் விவசாயம் தான் செய்கிறார்கள். சாட்சிகள் எந்த ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் பெரியகுளத்தை சேர்ந்தவர்கள். சாட்சிகள் 2 பேரும் உறவினர்கள் என்பதால் அவர்கள் சம்பவ இடத்தில் இருந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முருகவேல் என்னை தாக்கிய ஆயுதத்தை கையில் கொண்டு வந்தாரா என்றால் ஆமாம் கொண்டு வந்தார். வீட்டிலிருந்து கொண்டு வந்தார். அந்த ஆயுதத்தை போலீசார் கைப்பற்றினார்களா என்றால் இல்லை.

5. கடலை புஞ்சையில் மாடு மேய்ந்தது சம்மந்தமாக எனக்கும் எதிரிக்கும் பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். அந்த பிரச்சனை சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு மருத்துவமனையில் சிகிச்சை அளித்தார்களா என்றால் ஆமாம். நான் சிகிச்சையில் இருந்ததற்கான ஆவணங்கள் எதுவும் காவல் துறையினரிடம் கொடுத்தேனா என்றால் தற்போது எனக்கு ஞாபகமில்லை. சம்பவம் நடந்த இடம் பேருந்து நிறுத்தம் என்றால் சரிதான். உள்ளூர் கிராம மக்கள் அந்த பேருந்து நிறுத்ததில் தான் ஏறுவார்கள் என்றால் ஆமாம். சம்பவம் நடந்த போது ஊர் மக்கள் யாராவது அங்கே இருந்தார்களா என்றால் இல்லை

6. புகார் மனுவில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த சம்பவத்தில் எனக்கு மட்டும தான் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். எனக்கும் எதிரிக்கும் கடலை புஞ்சையில் பிரச்சனை இருந்ததால் பொய்யாக எதிரி மீது புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எனக்கு ஏற்பட்ட காயமானது கடலை புஞ்சையில் செல்லும போது தவறி முள்வேலியில் விழுந்ததால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தை சுற்றிலும் நான்கு பக்கங்களிலும் கடலை புஞ்சை உள்ளது என்றால் சரிதான்.

7. பேருந்து நிறுத்தம் அருகே நான்கு பக்கங்களிலும் இருந்து சந்திக்கும் சாலை உள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி